


இனமான பேராசிரியர் அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட பொருளாளர் நடராஜன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார், குடந்தை மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் டி.ஆர்.லோகநாதன், இளங்கோவன், வார்டு செயலாளர் திருமலை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பொது நூலகங்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் நூல்கள் கொள்முதல் செய்வதற்கான இணையதளத்தை தொடங்கி வைத்தார். மேலும் வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் கொள்கை 2024 வழிகாட்டி புத்தகத்தை அமைச்சர் வெளியிட, பதிப்பாளர்கள் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன், பொது நூலகத்துறை இயக்குநர் இளம்பகவத், மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### செஞ்சியில் அ.தி.மு.க, - நாம் தமிழர்

# கட்சியினர் 100 பேர் கழகத்தில் இணைந்தனர் !

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்

செஞ்சி, மார்ச். 13-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் தொகுதி நாம் தமிழர் கட்சியின் தொகுதி செயலாளர் சுதாகர் தலைமையில் மயிலம் வடக்கு ஒன்றிய நாம் தமிழர் கட்சியின் செயலாளர் கண்ணையன், அ.தி.மு.க.வைச் சேர்ந்த முத்துக்குமார் மற்றும் நெடிமொழியனுர் ஊராட்சியைச் சேர்ந்த தென்னரவி, துளசி, ரூபாமாலா, அஞ்சலை, சாந்தி, கலைமதி, ஆதிலட்சுமி, தேவபிரசன்னா, பாண்டியன், சிவபாலன், மணியம்பட்டு ஊராட்சி சேர்ந்த விஜயலட்சுமி, ஜெல்லா மேரி, முனியம்மாள், செல்லம்மாள், கீழையூர் ஊராட்சியைச் சேர்ந்த கலைவாணி, ஜெயலட்சுமி, மங்கல லட்சுமி, சுசீலா, இந்திராணி, மாரியம்மாள், சிவகாமி, பூங்காவனம், ஜெயா, ஜெயம்மால், முத்துக்குமரன், தினேஷ், மதன், மணிகண்டன், சபரி, முகேஷ், பெரியாண்டப் பட்டு ஊராட்சியைச் சேர்ந்தமாரியம்மாள், வாசுகி, கவிப்பிரியா, சுமித்ரா, அஞ்சலை, அமுதா, சீதா லட்சுமி, அன்பரசி, வேளாங்கண்ணி, கண்ணன், வசந்த், செஞ்சி ஒன்றியம் துத்திப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த வெங்கடேசன், தேவராஜ், ஏழுமலை, முத்து ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த நாம் தமிழர் மற்றும் அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த மகளிர்கள் மற்றும் நிர்வாகிகள் 100 க்கும் மேற்பட்டோர் அக் கட்சியிலிருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து நிர்வாகிகளும் கடுமையாக உழைத்து முதலமைச்சரின் ஸ்டாலின் குரலை இந்திய நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்ய அனைவரும் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றியச் செயலாளர்கள் மேல்மலையனூர் நெடுஞ்செழியன் வல்லம் துரை, இளம்வழுதி, மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர்தமிழரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### போதைப் பொருள்:

# ஆளுநர் ரவி கேவலமான அரசியல் செய்வதா?

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி.,எஸ்.டி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் கண்டனம்!

சென்னை, மார்ச் 13-

“போதைப் பொருள் கடத்தல் குறித்து ஆளுநர் ரவி கேவலமான அரசியல் செய்வதா?” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி.பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

போதை தடுப்பு வழக்கில் ஜாபர் சாதிக் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்டதுமே தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டார். கோடிக்கணக்கான தொண்டர்கள் கொண்ட ஒரு கட்சியில் ஒவ்வொருவரையும் ஸ்கேன் செய்தா சேர்க்க முடியும். இந்தச் சூழல் எல்லா கட்சிகளிலுமே உள்ளது. ஊழல்வாதிகள், கடத்தல் பேர்வழிகள், மோசடிப் பேர்வழிகளை தேடிச் சென்று கட்சியில் சேர்ப்பது பா.ஜ.க. மட்டுமே. கைது செய்யப்பட்டதுமே உடனே நடவடிக்கை எடுத்தது தி.மு.க.

இந்தச் சூழலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் தி.மு.க. மீதும் இந்தியா கூட்டணி மீதும் களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் பா.ஜ.க.வும் அதன் அடிமை எடப்பாடியும், பா.ஜ.க. தலைவர் போல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியும் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி பெண்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் இதயத்திலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இடம்பிடித்துள்ளார். இது எதிர்க்கட்சிகளுக்குப் பொறுக்கவில்லை. அதோடு அனைத்துத் தேர்தல் கணிப்புகளும் 40 இடங்களிலும் தி.மு.க. கூட்டணி வெல்லும் என்று கூறுகின்றன. இது பா.ஜ.க., அ.தி.மு.க.வுக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

இதன் காரணமாகவே அபாண்ட குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றனர். ஆர்.என்.ரவி ஏதோ தமிழ்நாட்டில் போதைப் பழக்கம் அதிகமாக ஏற்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறார். ஆளுநரே, முதலில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடக்கும் போதை கடத்தலை தடுத்து நிறுத்துங்கள். அங்கிருந்து தான் நாட்டின் பிற பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக குஜராத் திகழ்கிறது. 2015 ஆம் ஆண்டு ராஜஸ்தானில் பஞ்சாப் பா.ஜ.க. தலைவராக இருந்த கமல் சர்மா என்பவர் ரூ.20 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களைக் கடத்தி பிடிபட்டார்.

2019 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. எம்.பி. சம்பத்தியா உக்கேயின் மகன் சத்யேந்திரா வீட்டில் ரூ.12 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

2020 ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் பா.ஜ.க. தலைவர் ரமேஷ் உஷேந்தி ரூ.10 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களை கடத்தி சிக்கினார்.

2020 ஆம் ஆண்டு ஹரியானாவில் ரூ.10 கோடி மதிப்புள்ள போதை பொருட்களை கடத்தி பா.ஜ.க. மாவட்ட மாலைவர் ஜக் மோகன் லால் குமார், மகன் அமித் குமார் கைது செய்யப்பட்டார்.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பர் கவுதம் அதானி துறைமுகத்தில் ரூ.30 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் சிக்கின.

மேற்கு வங்கத்தில் பாஜக தலைவர் பமீலா கோஸ்வாமி வீட்டில் ரூ.15 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

2024 ஆம் ஆண்டு இமாச்சலப்பிரதேசத்தில் பா.ஜ.க. முன்னாள் முதலமைச்சரின் பேரன் சேத்தன் பர்மார் வீட்டில் ரூ.15 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் சிக்கின.

போதைப் பொருள் கடத்தில் தொடர்புடைய பா.ஜ.க. தலைவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதுபோன்ற பா.ஜ.க. தலைவர்கள் தான் போதைப் பொருட்களை அனைத்து மாநிலங்களுக்கும் கடத்துகின்றனர். உண்மை இப்படியிருக்க ஆளுநர் ரவி பொய்யை உண்மையாக்கப் பார்க்கிறார். தைரியம் இருந்தால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடக்கும் போதைக் கடத்தலைத் தடுத்து நிறுத்த அவரும் முயல வேண்டும்.

அப்படித் தடுத்து நிறுத்தினால் நாடு முழுவதும் விநியோகம் நின்று போகும். அதைவிடுத்து அமைதி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க ஆளுநரும், எடப்பாடியும், அண்ணாமலையும் முயல்வது கேவலமான அரசியலன்றி வேறென்ன?

எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோதே அப்போதைய அமைச்சர் விஜய பாஸ்கர் மீதான குட்கா ஊழலை வெளிப்படுத்தியவர் இன்றைய முதலமைச்சர். எதிர்க்கட்சிகளின் தொடர் அழுத்தத்துக்குப் பிறகு அனுமதி கொடுத்தார் ரவி. விஜயபாஸ்கருக்கு ஆதரவாக செயல்பட்டு அனுமதி தராமல் இழுத்தடித்தது ஏன்? என்பதற்கு ஆளுநரிடம் பதில் இருக்கிறதா?

இவ்வாறு எம்.பி. ரஞ்சன் குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



நாகை மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி மற்றும் திட்ட விளக்க கண்காட்சியை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்து மகளிர் சுய உதவிக்குழுவினர் தயார் செய்த கைவினைப் பொருட்களின் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ்,. நாகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ்சிங், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.

### அன்னை மணியம்மையார் 105 ஆம் ஆண்டு பிறந்த நாள்!

# அன்னையே நீவிர் மறையவில்லை - எங்கள் இரத்தத்தில் உறைந்தும், நிறைந்தும் வாழுகிறீர்கள்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 13-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

10.3.2024 அன்று நம் அன்னை ஈ.வெ.ரா.மணியம்மையார் அவர்களது 105 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா!

எளிமை, ஒப்பற்ற தன்னல மறுப்பு, எவராலும் எட்டவே முடியாத சகிப்புத் தன்மையின் உயரம், எல்லையற்ற அடக்கம், தொல்லை தராத துயர் துடைக்கும் தொண்டறப் பணி - இவற்றை ஓர் உருவமாக்கினால், அந்தப் பெருஉருவம் தான் எமது அன்னையார் அவர்கள்.

தனக்கென வாழா பெரியார்க்குரியார் அவர்! பெரியார்க்குரியார் என்றால், மக்களுக்கு நெறியாளர் என்பதே முழுப் பொருள்!



**களங்கள்தாம் எத்தனை! எத்தனை!!**

வாழ்ந்த வயதோ ஓர் அரை நூற்றாண்டுதான். ஆனால், அவரது தொண்டும், உழைப்பும், போராட்ட வரலாறும் பல நூற்றாண்டு மடமையை, மானமின்மையை, அறியாமையை, அடிமைத்தனத்தை எதிர்த்து முறியடிக்க, இறுதி மூச்சடங்கும்வரை களங்கண்டே வாழ்ந்த எங்கள் களங்கமிலா களமாடியும், அந்தக் களத்தில் நிகழ்த்திய அந்த வரலாற்றுச் சாதனைகளை செய்தும், அடக்கமென்ற ஆடையை எப்போதும் அணிகலனாய் அணிந்த அரிய தலைவர் அவர்!

**95 ஆண்டுகாலம் தந்தை பெரியாரை வாழ வைத்தவர்!**

பாசத்தோடும், பரிவோடும் கைவிடப்பட்ட குழந்தைகளையும் வாரி எடுத்துப் பெறாத பெற்ற தாயாக வளர்த்து, அவர்தம் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திடவும், உலகப் பெரியாரின் பாதுகாப்புக் கவசமாக்கிக் கொண்டு பாதுகாத்து, அவர் 95 ஆண்டுகால தொண்டறத்தை மக்களுக்குச் செய்திட முக்கிய கரணியாகவிருந்த ஒப்பற்ற தொண்டறத் தாய்!

தூற்றியவர்கள் கூட பிறகு போற்றிப் பெருமைப் படுத்திய எடுத்துக்காட்டான பொதுத் தொண்டின் புதுப் பாடம் அவர்!

தனது உடைமைகளையெல்லாம் மக்களுக்கே தந்து, கல்வித் தாயாகவும், கருணைத் தாயாகவும், வீரத்தாயாகவும், விவேகத் தலைவியாகவும் எமக்குப் போராட்டப் பாசறை பயிற்சி தந்த முன்னோடியாக புறநானூற்றுத் தாயையும், வீரத்தில் விஞ்சியவர் எம் அம்மா!

உங்கள் பெயர், எங்களது ஊக்க மருந்து!

உங்கள் தொண்டு, எங்களது கலங்கரை வெளிச்சம்!

உங்கள் சகிப்புத்தன்மை எங்களது பொதுவாழ்வில் பாடம்!

உங்களது கொடை உள்ளம் எங்களுக்கு நிரந்தர வழிகாட்டி!

உங்களது வீரம் எங்கள் போராட்ட குணத்தின் சாதனை!

எனவே, அன்னையே நீவிர் மறையவில்லை வாழுகிறீர்கள்! வாழுகிறீர்கள்!!

எங்கள் இரத்தத்தில் உறைந்தும், நிறைந்தும் வாழுகிறீர்கள்!

**பழிகளை எல்லாம் சுமந்து தொண்டாற்றிய அன்னை!**

அடக்கத்தோடு ஆர்ப்பரிக்காத அமைதி வழித் தொண்டை எங்களுக்கு முதல் பாடமாக்கிய எங்கள் அன்னையின் அருட்கொடையான இந்த இயக்கம், அய்யாவுக்குப் பின், செழித்தோங்க, உங்கள்மீது உலகம் வீசிய பழியும், வசையும் சிறந்த உரங்களாகி எம்மை என்றும் வழிநடத்திச் செல்வது உறுதி அம்மா!

உங்கள் ஆணையைப் புதுப்பித்துக் கொள்கிறோம்!

உங்கள் ஆணைப்படி எவ்வித சபலத்திற்கும் ஆளாகாமல், பெரியார் பணிக்காக எங்கள் சூளுரையை இந்நாளில் புதுப்பித்து வாழ்த்துகிறோம்!

வாழ்க! வாழ்க எம் அன்னை - தந்தை!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

அன்னை மணியம்மையாரின் 105 ஆம் ஆண்டு பிறந்த நாளான 10.3.2024 அன்று தஞ்சை பெரியார் மணியம்மை (நிகர்நிலை) பல்கலைக் கழகத்தில் உள்ள தந்தை பெரியார் - அன்னை மணியம்மையார் சிலைகளுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

### மாவட்ட ஆட்சியர் ச.உமா தலைமை! கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை! நாமக்கல் மாவட்டம் -

# ரூ.2.48 கோடியில் 253 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா -அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், மார்ச். 13 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அரிமா சங்கம் மண்டபத்தில் ரூ.2.45 கோடி மதிப்பில் 253 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தன் விருப்ப உரிமை நிதியிலிருந்து ரூ. 3.15 இலட்சம் மதிப்பில் 9 மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைப்பட்ட கட்டில் (Adjustable cot with air Bed) என மொத்தம் 262 பயனாளிகளுக்கு ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டா மற்றும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் எ.கே.பி. சின்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, ரூ.2.48 கோடி மதிப்பில் 253 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் 9 மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைப்பட்ட கட்டில் (Adjustable cot with air Bed) என மொத்தம் 262 பயனாளிகளுக்கு ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டா மற்றும் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி, பேசும் போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்கினார். அந்த வழியில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களின் முன்னேற்றத்தில் தனிகவனம் செலுத்தி மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம், மகளிருக்கு மாதம் ரூ.1000/ வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம், அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 40 சதவிகிதம் இடஒதுக்கீடு, உள்ளாட்சி தேர்தல்களில் பெண்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு, கைம்பெண்களுக்கு உதவித்தொகைத் திட்டம், திருமணம் ஆகாத 50 வயது கடந்த பெண்களுக்கு உதவித்தொகைத் திட்டம் என பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போதமலை மக்களின் கோரிக்கை ஏற்று ரூ.140 கோடி மதிப்பீட்டில் 31 கி.மீ தொலைவிற்கு போதமலைக்கு சாலை அமைக்கும் பணி, இராசிபுரத்திற்கு ரூ.53.39 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டடம் உள்ளிட்டபணிகளைஅடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளார். மேலும், பட்டா பெறுவதில் பொதுமக்களுக்கு இருக்கும் சிரமங்களை போக்கிட நத்தம் பட்டாக்களையும் இணைய வழியில் கொண்டு வந்துள்ளார். மேலும், அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களை நேரடியாக அணுகி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில், 13 துறைகளை உள்ளடக்கி மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப் புறங்களில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றார். கடந்த 10 ஆண்டுகளில் யாரும் செய்யாத பல்வேறு திட்டங்களை கடந்த 3 ஆண்டுகளில் செயல்படுத்தி உள்ளார். இன்றைய தினம் 253 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டம் முழுவதும் சுமார் 16,250 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில் இராசிபுரத்திற்கு மட்டும் 3500 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார். தொடர்ந்து, பிள்ளாநல்லூரில் மாற்றுத் திறனாளி விக்னேஷ் இல்லத்திற்கு சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தன் விருப்ப உரிமை நிதியிலிருந்து ரூ.38,500/ மதிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கட்டில் (Adjustable cot with air Bed) மற்றும் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.50,000/ உதவித் தொகையினை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆர். பார்த்தீபன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு அலுவலர் த.முத்துராமலிங்கம், இராசிபுரம் வட்டாட்சியர் சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் உடுமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மூலனூர் பேரூராட்சி 14வது வார்டு பகுதியில் 150க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மூலனூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சித் தலைவர் மக்கள் க.தண்டபாணி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் கார்த்திக், மூலனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் துரை தமிழரசு, தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், கொளத்துப்பாளையம் பேரூர்க் கழகச் செயலாளர் கே.கே.துரைசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் அ.பழனிச்சாமி, 6வது வார்டு செயலாளர் செல்வராஜ்,14 வார்டு செயலாளர் குமார், கிறிஸ்டி, பழனி, ரமேஷ் உள்பட பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.